# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Multidisilinary Journal )
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :24 October 2024
கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்.

## *Sangam area, Ethnography, marriage systems*

**இரா.பிரதீப் ராஜ்**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**வி.ஐ.டி பல்கலைக்கழகம்**
**வேலூர் 632014**

**முனைவர் ஆ.மரிய செபஸ்த்தியான்**
**உதவிப் பேராசிரியர்**
**வி.ஐ.டி பல்கலைக்கழகம்**
**வேலூர் 632014**

**ஆய்வு அறிமுகம்**

பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் என்பது,பல்வேறு வகையான சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது,அதில் ஒன்று பண்பாட்டின் அடிப்படையாக விளங்கக்கூடிய சடங்குகள் ஆகும்.மக்கள் பெரும்பாலும் தங்கள் புராதரமான வாழ்க்கையில் அவர்கள் பண்பாட்டிற்கு பெரிதும் முக்கியத்துவம் அளித்துள்ளனர்.இதனை நமக்கு கிடைக்கக் கூடிய சங்க இலக்கிய நூகள் எடுத்து இயம்புகின்றன.சங்க இலக்கியத்தின் வழி சங்க கால சமுகத்தை ஆராயும் பொழுது,அக்கால மக்களின் பண்பாட்டு அடையாளங்களை நம்மால் விரிவாக ஆராயமுடிகிறது. பண்பாட்டு அடையாளங்களின் வழி,சடங்குகள்,நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், போன்றவற்றின் தகவல்களும் நமக்கு கிடைக்கின்றது.இத்தகைய சங்க இலக்கிய அமைப்பினை நிலக்கோட்பாட்டைக் கொண்டு வரையறை செய்யப்படுகின்றன.இதனைல் தான் இதனை திணைச் சமுகம் என்று ஆய்வு உலகம் வரையரை செய்யகிறது. இந்த வகை சமுக மக்ககளால் பின்பற்றி வந்த,சடங்கு முறைகளில் ஒன்றாக விளங்கக்கூடிய, திருமணச் சடங்கு முறைகளை இனவரைவியல் கூறும் திருமண முறைகளுடன் ஒப்பிட்டு அவை எங்கனம் சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளது என்பதை பற்றி விரிவாக இவ்வாய்வு விளக்குகிறது..

***ABSTRACT***

*The ancient Tamil society had a complex lifestyle that includes various systems, one of which was rituals that formed the foundation of their culture. They have given greater importance to their culture. By studying Sangam Literature, Sagam people's cultural identities can be studied. As well as the portrayals about rituals, beliefs and customs of Tamil people are understood. Also, Sangam literature divides the lands on the basis of Land theory. Hence, researchers categorize the Sangam people as 'Thinai society'. In the present study, researcher aims to compare the marriage rituals portrayed in the Sangam literature with Ethnographic marriage systems. In the present study the researcher aims to compare Sangam people's marriage rituals with Ethnographic marriage systems literature is being analysed through this research*

**திறவுச்சொற்கள் ;**

**சங்க இலக்கியம், இனவரைவியல், திருமணச் சடங்கு**

***KEY WORDS:***

*Ancient Tamil society , Sangam Literature, 'Thinai society', Tamil marriage rituals*

**முன்னுரை**

மனிதனோடு தொடர்புடைய அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய துறைகளாக மானிடவியல் விளங்குகிறது. இந்த மானுடவியல் உடல் சார்ந்த மானுடவியல் அமைப்பு சார்ந்த மாணுடவியல் என்று இரண்டு

நிலைகளாக உள்ளது.[1] உடல்சார்ந்த மானுடவியல்( Biological Anthropology) என்பது பரந்து விரிந்த அறிவியல் துறையாக விளக்குகிறது.பல்துறையின் அறிவினை ஏற்றுமனிதனை ஆராய்கிறது. ஆனால் பன்பாட்டு மானுடவியல் (Culture Anthropology) என்பது, மனிதனின் அறிவியலுக்கு அப்பாற்பட்ட அமைப்பாக விளங்கக்கூடியதாகவும்,சமுகப் பண்பாட்டை முழுவதும் விளக்கக்கூடிய துறையாகவும் விளங்குகிறது. இத்துறையில் பல்வேறுவகையான உட்கூறுகள் காணப்படுகின்றன ஆயினும் தனி ஒரு சமுகத்தை பற்றிய முழுமையான தகவல்களை அளிப்பதற்கு இனவரைவியல் (Ethnography) என்ற துறை பெரிதும் உதவுகிறது. இனவரைவியல் என்பது ஓர் இனக்குழுவின் பண்பாட்டு சமுதாய — அமைப்புப் பொழுங்கின்(Social-Cultural System) ஆய்வின் வாயிலாக முழுதளாவிய அளவில் வரையும் இயலே இனக்குழு வரைவியல் [2] ஆகும். ஓர் இனக்குழுவின் பண்பாட்டு அறிவினை எட்டிபிடிக்கும் பல வழிகளில் இலக்கியம் ஒரு வழி ஆகும்.இதனை இனவரைவியல் எந்த அளவுக்கு அங்கிங்கரிக்கிறதோ அந்த அளவுக்கு அதன் உட்கூறுகளின் துணையுடன் இனவரைவியல் ஆய்வு வெற்றியும் அடைந்துள்ளது..இதற்கு இலக்கிய பனுவல்கள். சான்றாக அமைகிறது.இப்பனுவல்களில் வெளிப்பட்டுள்ள வதுவை சடங்குகள் இனவரைவியலாளர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ள, திருமண முறைகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இனவரைவியல் ஆய்வு**

இலக்கியம் என்பது ஒரே சமயத்தில் பண்பாட்டு படைப்பாகவும்,பண்பாட்டை விளக்கக்கூடிய ஆதாரமாகவும் விளங்குகிறது.இனவரைவியல் கூற்றினை உற்று நோக்கும் போது,அந்த சமுக அமைப்பின் நிலைப்பாட்டையும்,பண்பாட்டுச் சூழலையும் எடுத்துரைக்கும் கருவியாக இனவரைவியல் அமைகிறது என்கிறார் முனைவர் தனஞ்செயன் இந்த இனவரைவியல் ஆய்வின் அடிப்படை இன ஆய்வு பட்டியலினை மூன்று வகையாகப் பிரிக்கலாம் [3]

- ✓ **தொடக்ககால இனஆய்வாளர்கள்** கலாநிதி,க.கைலாசபதி,பேரா.கா.சுப்பிரமணியன்ஆ.சிவசுப்பிரமணியன்
- ✓ **இலக்கிய இனஆய்வாளர்கள்**

பேரா.க.ப. அரவாணன், பேரா.சிலம்பு நா. செல்வரசு, பேரா.பக்த வச்சல பாரதி, பேரா.தனஞ்செயன்

- ✓ **தொல்காப்பிய இன ஆய்வாளர்**

முனைவர் ஞா. ஸ்டீபன்

**இனவரைவியலும் அதன் உட்கூறுகளும்**

இனவலைவியல் என்கபது மானுடவியலின் எண்வகை கூறுகளில் ஒன்றாக மட்டும் இல்லாமல் இன ஆய்விற்கு ஆதாரமாகவும் திகழ்கிறது.அதே சமயம் இனங்கள் குறித்த பண்பாட்டு ஆவனமாகவும் இது அமைகிறது.இதன் மூலம் ஒவ்வொரு சமுகத்தின் அல்லது தனிப்பட்ட இனக்குழுவின் தன்மையினை,பண்பாட்டு ரீதியாக ஆய்வு செய்து அதன் மூலம் பெறப்பட்ட தகவல்களைத் தொகுத்து விளக்கம் அளிக்கப்படுவதால், இதனை இனக்குழு வரைவியல் என்று கூறுவர்.[4] இந்த வகையான ஆய்வினை இலக்கியத்தில் பொருத்திப் பார்ப்பதற்கு இனவரைவியல் ஆய்வாளர்கள் 37 வகையான கூறுகளை வகைப்படுத்துகின்றனர் 1 புவிச்சூழல் 2 சுற்றுச் சூழல், 3 காலநிலை 4 குடியிருப்பு நிலை 5 பொருள்சார் பண்பாடு 6 குடும்ப அமைப்பு முறை 7 திருமணமுறை 8 உறைவிட முறை9 வாழ்வியற் சடங்குகள் 10 குழந்தை வளர்ப்பு முறை 11 பண்பாட்டு வயமாக்கமுறை 12 மக்களின் இளவியல் பாங்குகள் 13 மடக்கொடை 14 மணவிலக்கு முறை 15 வாழ்க்கை பொருளாதால முறை 16 தொழிற் முறை 17 உற்பத்தி முறை 18 நுகர்வு முறை 19 பங்கீட்டு குறை 20 பரிமாற்ற முறை 21 கைவினைத் தொழில் முறை 22 அரசியல் முறை 23 அதிகார உறவுகள் முறை 24 சமுகக்கட்டுப்பாட்டு முறை 25 மரபு சார்ந்த சடங்குகள் 26 சமய நம்பிக்கை சடங்குகள் 27 பொதுவான சடங்குகள் 28 வழிபாட்டு முறைகள் 29 மந்திரம் 30 சூனியம் 31 விழாக்கள் 32 இசை 33 விளையாட்டுகள் 34 அழகியற் சிந்தனைகள் 35 வழக்காறுகள் 36 ஈமச்சடங்குகள் 37 பிற பொடர்புடையச் செய்திகள்.

**இனவரைவியலும்- இலக்கிய பதிவுகளும்**

இலக்கியம் என்பது பண்பாட்டின் பிரதி பிம்மபமாக திகழ்கிறது.அதனால் இனவரைவியல் ஆதாரங்களில் ஒன்றாக இலக்கியம் காணப்படுகிறது.இலக்கியத்தில் காணப்படும் திணைவாரியான ஒழுங்கு முறைகளையும் அதன் கருப்பொருள் அமைப்பின் மூலம் அறியப்படும்,மக்களின் பண்பாட்டு நிலையினையும் இனவரைவியல் கூறுகளைக் கொண்டு ஆய்வு ரீதியாக விளக்க முடிகின்றது.

*சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகளையும் வரலாற்றையும் சங்க இலக்கியங்களைக் கொண்டே பேசி வருகின்றோம். நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வாழ்வியல் விழுமியங்கள், வாழ்க்கைமுறைகள், சடங்குகள், தொழில்கள், புழங்குப் பொருட்கள், மக்கள் குழுக்கள், உணவு முறைகள், ஆடை அணிகலன்கள், வழிபடு தெய்வங்கள், குழுத்தலைவர்கள், போர் முறைகள், போர் கருவிகள், விலங்குகள், பறவைகள், நிலஉயிர்கள், ஐம்பூதங்கள் போன்றவை குறித்த செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவையனைத்தும் இனவரைவியல் தரவுகள் ஆகும்* [5] எனும் கருத்து இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

சங்க இலக்கிய எட்டுத்தொகை அடிவரையறையை மையமாகக் கொண்டு, ஐந்திணை அடிப்படையில் அகச் செய்யுள்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைக் குடியினரின் இனவரைவியலைப் பெற இயலுகிறது. மேலும், பத்துப்பாட்டின் மூலம் பாணர், பொருநர், கூத்தர் ஆகிய இனத்தவரின் இனவரைவியலைப் பெற இயலுகிறது. அதனையடுத்து, காப்பிய காலத்தில் வணிகக் குடியினர் போன்ற உயர்குடி மக்களின் இனவரைவியலையும், தொல்குடியினரான வேட்டுவர், ஆயர், குறவரின மக்களின் இனவரைவியலையும் மற்றும் பிற குடியினர்களின் இனவரைவியலையும் பெற முடிகிறது. சிற்றிலக்கியத்தில் பள்ளு, குறவஞ்சி முதலான விளிம்பு நிலை மக்களின் இனவரைவியலை இனங் காட்டுவதாக அமைந்துள்ளன. இக்கால இலக்கியங்களான கவிதை, சிறுகதை, புதினங்களின் வழியே விளிம்பு நிலை மக்களின் சமூக இயங்கங்கலைப் பிரதிபலிப்பதாக அமைவதனை அறியமுடிகிறது. எனவே, காலந்தோறும் படைக்கப்பெறும் இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டையுடைய சமூகத்தைப் பற்றிய இனவரைவியல் செய்திகள் இடம் பெறும் என்பது நிலையான பதிவாக அமைகின்றன.

*வேறு வகையான ஆவணங்கள் எவையும் கிடைக்கப் பெறாத, ஒரு கடந்த காலத்திய சமூகத்தை, அதன் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு, ஆராய்வதற்கு அச்சமூகம் படைத்தளித்த கலை இலக்கிய வடிவங்களையே முக்கிய ஆதாரங்களாகப் பயன் படுத்துவதை ஒரு தவிர்க்க முடியாத விதி மீறலாக நாம் ஏற்க வேண்டியவர்களாக உள்ளோம்* [6].

இவ்வாறாக இலக்கியங்களில் இனவரைவியல் பதிவுகள் காணப்படுவதை நம்மால் அறியமுடிகின்றது. இதன் வாயிலாக இனவரைவியல் கூறுகளில் ஒன்றாக விளங்க்கூடிய சடங்குகளின் அமைப்பின் வழி திருமண சடங்குகள் பிரிப்பு முறைகளை பற்றி காண்போம்.

**சடங்குகள்**

மனிதர்கள் தம் வாழ்க்கையில் நடைப்பெறும் செயல்பாடுகளை ஒழுங்குப்படுத்தி,அவற்றை இன்றியமையாத தேவைக்காக மாற்றி அமைக்கும் போதும் அவற்றை நம்பிக்கையுடன் இயந்து நோக்கும் போதும் அதற்கு புனிதத் தன்மை பிறக்கிறது. இந்தப் புனித தன்மைக் கொண்ட செயல்பாடுகள் மனித வாழ்வில் சடங்குகள் ஆகின்றன.மேலும் ஒவ்வொரு சமுகத்தின் மூல வடிவமாக விளங்குவது அந்த சமுகத்தினர் கொண்டுள்ள தொண்மங்கள் ஆகும். அந்த தொண்மங்களும் அவற்றைப் பற்றிய செய்திகளும் சடங்கிற்கு மூல ஆதாரமாக விளங்குகிறது, என்று சடங்கின் வரையறையை திரு.பக்தவச்சலபாரதி ஆவர்கள் எடுத்துக்கூறுகிறார். நமது நம்பிக்கைக்கு புனிதத் தன்மை ஏற்படுத்தி சமயத்தின் கருப்பொருளாக கருதப்படும் இச்சடங்கியல் முறையானது மனித வாழ்வில் ஒன்றோடு ஒன்றாக பார்க்கபடுகிறது என்பதை அவர் இதன் மூலம் வெளிப்படுத்துகிறார். தெய்வத்திற்கு மனம் உண்டு என்றும் அந்த தெய்வத்தின் மனதை நிரைவு செய்யும் பொருட்டு இச்சடங்கு முறைகள் அமையப்படுகிறது. பலவகையான சமுதாய மக்களிடையே சடங்கு பெரும் பங்கு வகிக்கிறது.இதில் சிறப்புக்குரிய செயல்பாடு என்னவென்றால் இச்சடங்கியல் முறைகள் குடும்பங்களையும் அல்லது சமுகத்தினரையும் ஒன்றுபட வைக்கிறது. சங்க கால சமுகம், முதல் இன்றைய

கால பெரும் சமுகம் அனைத்திலும் இடம் பெரும் சடங்குகள்,மக்களின் இனக்குழுவை அடையாளப்படுத்துகிறது. சங்க சமுகத்தை ஆய்வு செய்வதற்கு கல்வெட்டுகள், நாணயங்கள், போன்றவை கிடைத்தாலும் கூடுதலான பயணாக கருதவேண்டியது சங்க இலக்கிய தரவுகள் அதில் காணப்படும் திருமண முறைகள் இன்றைய இனவரைவியலாளர்கள் வகுத்துள்ள திருமண வகைக்குள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பற்றி விரிவாக காண்போம்..

**வதுவைச் சடங்கு**

சங்க இங்க்கியத்தில் திருமணம் என்ற சொல் வதுவை, மன்றல், மணம்,வரைதல் என்று பல்வேறு சொற்களில் அடையாளப்படுத்தப்படுகிறது, மனிதனுக்கு மனிதன் செய்யும் சடங்குகளில் மிகவும் புனித நிகழ்வாக திருமணச் சடங்குப் பார்க்கப்படுகிறது.இருவர் வாழ்வில் புதிய உறவை ஏற்கடுத்தி வைத்து சமுதாயத்தில் அவர்கள் வாழும் முறைக்கு மூலாதாரமாக வதுவைச் சடங்கு அமைகிறது.இதனை தமிழின் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம்

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப[7] (தொ.பொ,கற்பு-4)**

களவில் ஈடுபட்ட இளைஞர் சிலர் களவு வாழ்க்கை வெளிப்பட்ட பின்பும் நான் இவளை அறிந்தது இல்லை என்று பேசியும்,காதல் மணம் கொண்டவளை கைவிட்டும் வந்தான், இப்பழக்கம் பலரிடம் பரவாமல் இருப்பதற்காகத் களவு வெளிப்பட்ட பின் பலர் அறிய திருமணம் நிகழ்ந்ததாக தொல்காப்பியர் கூறுகிறார்.

சங்க இலக்கியத்தில் பருவம் எய்துவதற்கு அடுத்தக் கட்ட நிலைமாற்றமாக திருமணம் காணப்படுகிறது.திருமணம் என்பது பெண் என்பவள் ஒருவனுக்கே உரிமைக் கொண்டவள் என்பதனை விளக்குகிறது. இதனை *ஒருத்தியை ஒருவனுக்கு உடைமையாக்குவதில் திருமண்ச் சடங்குகள் பெரிதும் பங்காற்றுகின்றன* [8] என்று சிலம்பு நா செல்வரசு குறிப்பிடுகின்றார்.

**இனவரைவியல் கூறும் மணத் துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்**

மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறையை தொல்காப்பியர் எட்டு வகையாக உள்ளது என்பதை குறிப்பிடுகிறார் .இதனை தமிழ் இலக்கான நூலில்

**மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள் [9]**

இங்கு மறையோர் என்று குறிப்பிடுவது அறம், பொருள் இன்பம் வீடுபேறு நிலை என்ற நான்கு வகையான உறுதிப் பொருள்களை நுண்மையோடு வகுத்தோதிய மறையோர்களைக் குறிக்கும். மன்றல் என்பது தலைவன் தலைவி இருவரும் கூடி ஒழுகும் இன்பநிலையைக் குறிக்கிம்..

***எட்டு வகை மணம்*** — பிரம்மம்(அறநிலை),பிரசாபத்தியம்(ஒப்பு),ஆரிடம்(பொருள்கொள்),தெய்வம்தெய்வம்), கந்தருவம்( யாழோர் கூட்டம்),அசுரம்(அரும் பொருள் வினை),இராக்கதம்(இராக்கதம்)பைசாசம்(பேய் நிலை) மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை பலவகையாக பிரித்து இருந்தாலும்,இனவரைவியல் துறையைச் சார்ந்தவர்களும் 8 வகையாக பிரித்துள்ளர்[10]..

- ✓ **தகுதிகாண் திருமணம்** - *PROBATIONARY MARRIAGE*
- ✓ **கடத்தல் மணம்** -*CAPTURE MARRIAGE*
- ✓ **தேர்வுத் திருமணம்** -*TRIAL MARRIAGE*
- ✓ **மணப்பெண் பணம் கொடுத்து திருமணம்** -*PURCHASE MARRIAGE*
- ✓ **பணிசெய் மணம்** - *SERVICE MARRIAGE*
- ✓ **பரிமாற்றுத் திருமணம்** - *EXCHANGE MARRIAGE*
- ✓ **உடன் போக்குத் திருமணம்** - *ELOPEMENT MARRIAGE*
- ✓ **வலிய மணம்** -*INTRUSION MARRIAGE*

மேற்கூறப்பட்ட எட்டு வகையான மணமுறைகளுள் சங்க இலக்கியத்தில் நான்கு வகையான மணமுறை காணப்படுகிறது. அவை தகுதிக்காண் திருமணம், மணப்பெண் பணம் கொடுத்து திருமணம், பணிசெய் திருமணம்,

உடண்போக்கு திருமணம் இவை மட்டுமே சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. இவை எவ்வகையாக வெளிப்பட்டுள்ளது என்பதைப் பற்றி காண்போம்

**தகுதிக்காண் திருமணம்**

மணமகன் தான் விரும்பும் ஒரு பெண்ணை திருமணம் செய்துக் கொள்ள மணப்பெண் வீட்டாருடன் பல மாதங்கள் தங்கி அனைத்து வகையான பொருளாதார செயல்பாடுகளிலும் அவன் ஈடுபட வேண்டும்.அவன் செய்யும் செயலில் மணமகளின் பெற்றோருக்கு மகிழ்வு ஏற்பட்டால் மணப்பெண்ணை அந்த மணமகனுக்கு திருமணம் செய்து முடிப்பார்கள்..இதனை தகுதிக்காண் திருமணம் என்பர்[11]இவை சங்க இலக்கியத்தில் மணமகனின் வீரத்திற்கு இணையாக பேசப்டுகிறது..அதாவது தகுதிக்காண் திருமணம் என்பது, முல்லைக்கலியில் வரும் காளையை அடக்கும் முறை என்றுக் கூறலாம்.. திருமணத்திற்காக ஏறு தழுவும் விழா நடைபெற்றது. பார்க்குமிடமெல்லாம் விழாக் கோலத்துடன் மகளிர் கண் பூத்துப் பார்த்துகொண்டிருந்தனர். காளையின் மேல் பாய்ந்து பிடிப்பதற்காக, காளை மேல் ஆயர் குல ஆடவர்கள் பலர் ஆரவாரத்துடன் காளைக்கு எதிர் எதிர் சென்றனர். கொல்லும் வில்லைப் போல வளைந்து காளைகள் சினத்துடன் மேல் எழுந்து ஓடிப் பாய்ந்தன. இதனை

**எழுந்தது துகள்;**
**ஏற்றனர் மார்பு;**
**கவிழ்ந்தன மருப்பு;**
**கலங்கினர் பலர் [12](கலி- 21-24)**

காளைகளால் மண்ணின் துகள் எழுந்தது. பொதுவர் தம் மார்பினை முன்னிறுத்திப் பாய்ந்தனர். காளையின் கொம்புகள் முட்டுவதற்காகக் கவிழ்ந்தன. அது கண்டு பலர் கலங்கினர். எது எப்படி இருந்தாலும் இன்று ஒரு பொதுவன் (இடையன்) காளையை அடக்கிவிட்டான். அதனால் திருமண விழாவுக்கான தண்ணுமை முரசு முழங்கிற்று. அந்த முழக்கத்துடன் எல்லாரும் சேர்ந்து குரவை ஆடினர். காளையை வளர்த்தவள் அடக்கிய பொதுவனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். அவளது தோளையும் அவனையும் அந்தச் சிறுகுடி மக்கள் பாராட்டிப் பேசினர். எங்கும் மகிழ்ச்சி. இந்த திருமண தேர்வு முறையினை

**ஆங்கு, இனி**
**தண்ணுமைப் பாணி தளராது எழூஉக**
**பண் அமை இன் சீர்க் குரவையுள், தெண் கண்ணி,**
**திண் தோள், திறல் ஒளி, மாயப் போர், மா மேனி,**
**அம் துவர் ஆடைப் பொதுவனோடு, ஆய்ந்த**
**முறுவலாள் மென் தோள் பாராட்டி, சிறுகுடி**
**மன்றம் பரந்தது, உரை[13]!(கலி 33-39)**

இவ்வாறு கூறுகிறது.கலித்தொகையில் மேலும் ஒரு பாடல் ஏறுதழுவி திருமணம் செய்த நிகழ்வு கபேசப்படுகிறது கலி-103,வது பாடலும் நம்மால் ஆயர் ஏறு தழுவும் மரபைக் குரவைப்பாடலின் மூலம் தோழி தலைவியை விரைவில் மணம் செய்து கொள்ளுமாறு தலைவனுக்கு அறிவுறுத்தும் வகையில் இப்பாடல் அமைய்துள்ளது..இன்றைய நிலையில் இந்த வழக்கமானது ஒரு குறிப்பிட்ட இடங்களில் வேறுவகையாக பின்பற்றி வரப்படுகிறது. உதாரணமாக [14]அசாமிலுள்ள குக்கிப் பழங்குடிகளில் ஒருவன்,தான் விரும்பும் பெண்ணை திருமணம் செய்து கொள்ள மணப்பெண் வீட்டில் தங்கியிருந்து மணமகளின் பெற்றோரின் விருப்பத்துடன் திருமணம் செய்யும் வழக்கம் இன்றும் நடைமுறையில்,உள்ளது…தன் தகுதியை காண்பித்து மணமகளை திருமணம் செய்த பண்பாட்டு நிகழ்வு நடந்தமையால் இதற்கு தகுதிக்காண் திருமணம் என்று பெயர்.

**மணப்பெண் பணம் கொடுத்து திருமணம்**

மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குப் பணமோ,பொருளோ கொடுப்பதும் அல்லது வேறு வகையான செல்வம் கொடுப்பதும் மணப்பெண் பணம் கொடுத்து திருமணம் செய்துக் கொள்ளும் நிகழ்வாக கருதப்படுகிறது.பெண்கள் திருமணத்திற்கு பிறகு கணவனின் வீட்டில் உழைக்க வேண்டும் என்பதால் அப்பெண்ணை இழந்த மணமகள் வீட்டாருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையோ,பொருளோ கொடுக்கப்படும்.இதனை மணப்பெண் திருமணம் என்று கூறுவர்[15]. சங்க இலக்கியத்தில் பெண் கேட்டு வரும் தலைவன் தான் விரும்பும் தலைவிக்காக தமது பொருள்கள், செல்வங்கள், கொடுத்து திருமணம் செய்து இருக்கிறார்கன்.மணமகன் மணமகளுக்குப் பரிசம் தந்து மணந்து கொள்வது அக்கால வழக்கம். இதனால் மகளை பெற்ற தந்தை மகளின் காதலனுக்கு மட்டும் தான் மணம் முடித்து தருவான்.மணந்துகொண்டு இவளை நீ தூய்க்கலாம் என்று தலைவனுக்கு தோழி அறிவுருத்தும் வகையில் கீழ் வரும் பாடல் அமைகிறது.

**தெருமரல் உள்ளமொடு வருந்தும் நின்வயின்,**
**'நீங்குக' என்று, யான் யாங்ஙனம் மொழிகோ?**
**அருந்திறற் கடவுட் செல்லூர்க் குணாஅது**
**பெருங்கடல் முழக்கிற்று ஆகி, யாணர்,**
**இரும்புஇடம் படுத்த வடுவுடை முகத்தர்,**
**கருங்கட் கோசர் நியமம் ஆயினும்**
**'உறும்' எனக் கொள்குநர் அல்லர்-**
**நறுநுதல் அரிவை பாசிலை விலையே! [16](அகம்-களிற்று-90வது பாடல்)**

தலைவியை காண ஆவலுடன் வருகிறான் தலைவன்,அவன் தலைவியை பார்க்க வரும் வழிகளில் பல இடர்பாடுகள் தோன்றுகின்றது.இதனால் வருத்தமுற்ற தலைவி தோழியிடம் தலைவனின் நிலைக்குறித்து வருத்தமடைகிறாள் இதனை கண்ட தோழி தலைவனிடத்தில் மிகுந்த காதலுடன் தலைவியை காண வரும் உன்னை வராதே நீங்குக என்று நான் எப்படிச் சொல்வேன்.?அரிய திறம் படைத்த கடவுள் குடிக் கொண்டுள்ள ஊர் செல்லூர்,அதன் கீழ் திசையில் கடலும் அந்த கடலுக்கு நிகரான,படைபலமும் வீரமும் கொண்ட கோசர்கள் வாழ்கிறார்கள்.அந்த ஊரை வென்று இவளுக்கு பரிசாக(பரிசம்) அளித்து விரைவில் திருமணம் செய்து கொள்வாய்யாக. என்று தோழி தலைவன் இடத்தில் கூறுகிறாள். இதன் மூலம் தலைவியை திருமணம் செய்துக் கொள்ள ஓர் ஊரை பரிசமாக கேட்ட நிகழ்வு வெளிப்படுகிறது.
இதுப்போன்ற நிகழ்வு ஆப்பிரிக்கா முழுவதும் மிகவும் சிறப்பானதொரு வழக்கமாக உள்ளது.பெண்களின் குடும்பத் தகுதிக்கேற்ப,மணப்பெண்ணிற்கு பொருள் கொடுக்கும் பொருளின் அளவும் வேறுபடுகிறது. பகண்டா சமுகத்தில் பசு, ஆடுகள், ஆயிரக்கணக்கான கிளிஞ்சல்கள் போன்றவை அளித்துள்ளனர்.கென்யா,குசி,திவ்,போன்ற பகுதியில் வாழ்பவர்களும் மணப்பெண் வீட்டாருக்கு கால்நடைகள் அளித்துள்ளனர். பிலிப்பைன்சில் வாழும் சுபானும் மக்கள் மணப்பெண் வீட்டாருக்கு அளிக்க வேண்டிய மிகுதியாகும்.மணமகன் ஓராண்டு முழுவதும் சம்பாதிக்கக் கூடியதைப் போன்று பல மடங்கு மதிப்புள்ள பொருட்களை பல தவணைகளில் தரவேண்டும்., இந்திய பழங்குடியினரும்,இவ்வாறான பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.என்று பக்தவச்சல பாரதி அவர்கள் [17](ப.எண் பண்பாட்டு மானுடவியல் 412) கூறியுள்ளார்.

**சேவை மணம் அல்லது பணி செய் திருமணம்.**

மணமகன் ஒருவன் தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து கொள்ள மணப்பெண்ணிண் வீட்டிற்குச் சென்று, மணமகளின் தாய் தந்தை மகிழும் வகையில் அவர்கள் இல்லத்தில் அவர்களுக்காக பணிவிடைகளை செய்து அவர்கள் வீட்டிற்கு பணிசெய்து தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்யும் முறை சேவை மணம் என்று கூறுவர்.இந்த நிகழ்வு சங்க இலக்கியத்தில் நெய்தல் திணைப் பாடலில் அம்முணவர்,கூறிப்பிடுகிறார் தலைவன் தான் விரும்பிய தலைவியின் ஊருக்குச் சென்று அவள் பொன்னிறச் செருந்திப் பூ மாலையை அணிந்துகொண்டு நண்டோடு விளையாடிக்கொண்டிருக்கும் காட்சியை காண்கிறான்,அப்போது தன் நெஞ்சிடத்தில் நலம் தரும் விழுமிய பொருளைக் கப்பல் நிறையத் தந்தாலும் அவளை நாம் பெற முடியாது. அற வழியில் செல்ல முயல்கிறான்,அந்த வழி சேவை மணமுறையாக அமைகிறது.இந்த நிகழ்வு பின்வரும் பாடல் நமக்கு உணர்த்துகிறது..

**நாம் உறை தேஎம் மரூஉப் பெயர்ந்து, அவனொடு**
**இரு நீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழுதும்,**
**பெரு நீர்க் குட்டம் புணையொடு புக்கும்,**
**படுத்தனம், பணிந்தனம், அடுத்தனம், இருப்பின்,**
**தருகுவன் கொல்லோ தானே விரி திரைக்**
**கண் திரள் முத்தம் கொண்டு, ஞாங்கர்த்**
**தேன் இமிர் அகன் கரைப் பகுக்கும்**
**கானல் அம் பெருந் துறைப் பரதவன் எமக்கே(அகம் 280)[18]**

தலைவியை அடைய முடியுமா என எண்ணிய தலைவன் . அவள் தந்தையுடன் சேர்ந்து உப்பு வயலில் பணி செய்யலாம். கடலில் அவன் புணையில் சென்று மீன் பிடிக்கலாம். இப்படிச் செய்தால் அவள் தந்தை அவளை நமக்குத் தருவான் என்று உரைக்கிறான் இந்த நிகழ்வை ஜார்ஜ் பீட்டர் மர்டாக் என்ற மாணிடவியல் ஆய்வாளர் தொகுத்த 565 இனக்குழு மாதிரிகளுள் 13 சமுகத்தினர் இம்முறையான திருமண முறையை மேற்கொள்கின்றனர்.அவன் பணிக்காலத்தில் எந்த நேரத்திலும் அவனுக்கு திருமணம் நடக்கலாம். பெரும்பாலும்

இந்த வகையான சேவை மணப்பெண்ணின் பணத்திற்காக ஈடுசெய்வதற்காகவே செய்யப்படுகிறது..கோண்டு,பெய்கர்,காசா,[18] போன்ற இனத்தவர்கள் அதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

**உடண் போக்கு மணம்;**

மணமக்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து காதலர்களாக வாழ்ந்து இறுதியில் மணம் செய்ய முற்படும் போதும், மணமக்கள் இருவீட்டாரில் எதிர்ப்பு ஏற்படும் போதும்,மணமக்கள் இருவரும் மணமொத்த நிலையில்,வீட்டை விட்டு வெளியேறி திருமணம் புரிந்துக்கொள்வர். இதனை உடன் போக்கு மணம் என்று கூறுவர்.சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவியின் திருமணமானது, பெரும்பாலும்,உடன்போக்குத் திருமணமாக இருந்து இருக்கிறது[19]. இதற்கு ஏராளமான சங்க இலக்கியப்பாடல்கள் சான்றாக அமைகின்றன.சங்க இலக்கிய உடண்போக்குத் திருமண வாழ்வில் தோழி முதன்மை இடம் பெறுகிறாள்.

தலைமக்கள் இருவரையும் உடண்போக்கில் ஈடுபடச் செய்யும் முழுவுரிமை தோழிக்கு மட்டுமே உள்ளது என்பதை,சங்க இலக்கியப்பாடல்கள் விளக்குகின்றன. தலைவியின் துயரகண்ட தோழி தலைவியிடத்தில் இந்த ஊரார் நீயும் தலைவனும் சந்தித் நிகழ்வினை வைத்து பழித் தூற்றிக் கொண்டே இருப்பர்,உன் தாய் வீட்டில் நீ தனிமைத் துயர் கொண்டு வருத்தம் அடைவாய் இந்த நிலையெல்லாம் உணக்கு இனி வேண்டாம் நீ தலைவனுடன் உடண்போக்கில் செல்வதே சிறந்தது என்று தோழி தலைவியிடத்தில் கூறுகிறாள்.இதனை பின்வரும் பாடல் விளக்குறது..

**ஊஉர் அலர் எழ, சேரி கல்லென,**
**ஆனாது அலைக்கும் அறன் இல் அன்னை**
**தானே இருக்க, தன் மனை; யானே,**
**நெல்லி தின்ற முள் எயிறு தயங்க**
**உணல் ஆய்ந்திசினால், அவரொடு - சேய் நாட்டு**
**விண் தொட நிவந்த விலங்கு மலைக் கவாஅன்,**
**கரும்பு நடு பாத்தி அன்ன,**
**பெருங் களிற்று அடிவழி நிலைஇய நீரே.[20] (குறுந்தொகை 262)**

மேற்கண்ட பாடலின் வழி,தலைவியின் நிலையினை அறிந்த தோழி தலைவியிடத்தில் உடன் போக்கு நிகழ்வை வலியுறுத்துவதாக அமைகிறது. இதேப் போன்று தலைவனிடத்தில் தோழியானவள் களவு நீட்டித்த நிலையிலுயும்,தலைவன் தலைவியின் காதலுக்கு ஊரார் அளர் பேசுவதை குறித்தும் தலைமகன் இடத்தில் தோழி உடண் போக்கு நிகழ்வினை மேற்கொள்ள வேண்டும் உங்களது களவு வாழ்வானது எங்களின் தாய்க்கு தெரிந்து விட்டது இனியும் தாமதிக்காமல் உடண்போக்கிற்கு தயாராகுங்கள்.என்று தலைவிக்காக தலைவனிடத்தில் கூறுகிறாள்,.இதனை பின்வரும் பாடல் வரிகள் உணர்த்துகிறது.

**அன்னையும் அறிந்தனள்அலரும் ஆயின்று**
**நல்மனை டிநடுநகர் புலம்புகொள் உறுத்தரும்**
**இன்னா வாடையும் மலையும்**
**நும் ஊர்ச் செல்கம் எழுகமோ?[21]**

**(ஐங்குறுநூறு 236)**

இப்பாடல் வழி தலைவியின் நிலையினை தலைமகனுக்கு அறிவித்து அவர்களை உடண்போகுகிற்கு வலியுறுத்தும் நிகழ்வானது,வெளிப்படுகிறது...அதுமட்டும் அல்லாமல் தலைவியின் களவு வெளிப்பட்ட இக்கட்டான நிலையயில் தலைவிக்கு வேற்று வரைவிற்கு ஏற்பாடு செய்தலும் கூடும்அங்கணம் வேற்று வரைவு நிகழ்த்த தாய் எண்ணிய கணமே தோழி தலைவியை தலைவனுடன் உடன்போக்கு செல்ல ஏற்பாடு செய்கிறாள். ''***அறத்தோடு நின்ற பிறகும் பெற்றோர் நொதுமலர் வரைவிற்கு முயலும் போதும் தோழி உடண் போக்கிற்கு வழி வகுப்பாள்*** [22]என்று மு. இராகவவையங்கார் தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள்ளார்.இங்கு நோக்கத்தக்கதாகும்.அதற்கு தலைவியும் தனது உடன்பாட்டைத் தெரிவிக்கிறாள்.

**பொம்மல் ஓதிளம்மகள் மணன் என**
**வதுவை அயர்ந்தனர் நமரே அதனால்**
**------------------------**
**அருஞ்சுரம் சேறல்அயர்ந்தனென் யானே [23]அகம் 221; 3-4,14)**

என்ற அடிகளின் மூலம் இதனை அறியலாம். மேலும் தோழி மட்டும் உடண்போக்கிற்கு வழிவகை செய்யவில்லை சில பாடல்கள் தலைவியை மணந்து கொள்ள தலைவனே உடண் போக்கிற்கு இசையும் நிகழ்வு வெளிப்படுவதை காண முடிகிறது.

**முளவு மாவல்சி எயினர் தங்கை**
**இளமா எயிற்றிக்கு நின்நிலை அறியஞ்**
**சொல்லினென் இலக்கும் அளவை**
**வெள்வேல் விடலை விரையாதீமே !![24] (ஐங்குறுநூறு 364)``**

தலைவன் தோழியிடம் தலைவியை மணக்க சாத்தியக் கூறுகள் குறைவாக இருப்பதால் நாங்கள் உடண்போக்கு மேற்கொள்வதே சிறந்தது என்று எண்ணுகிறேன் என்று தோழிக்கு உரைத்துஅவள் சம்மதமதத்தை வேண்டி நிற்கிறான். இவ்வாறாக சங்க இலக்கிய பாடலில் உடண்ப்போக்கு நிகழ்ந்த நிலை பேசப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் இந்த வகை மணம் இந்திய பழங்குடிகளிடமும்,இந்துச் சமுதாயத்திலும் உலகின் அனைத்து பகுதிகளிலும் பரவலாக உள்ளது என்கிறார்[25] பக்த வச்சலபாரதி (பண்பாட்டு மானிடவியல் ப.எண் 393)

**தொகுப்புரை**

சங்க காலம் குறித்த பல ஆய்வுகள் வந்துள்ளன,அவை பெரும்பாலும் வரலாற்று பின்புலத்திலே ஆராயப்படுகின்றன.பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியத்தில் உள்ள சொற்களை வைத்தும், பேரா.வா.ஐ.சுப்பிரமணியம் மொழியின் அமைப்பை வைத்தும் சங்க இலக்கிய ஆய்வுக்களங்களாக ஆய்வினை மேற்கொண்டனர்.சங்க இலக்கியத்திற்கு ஒருங்கிணைந்த துறையான மானிடவியலின் உட்கூறுகளின் ஒன்றான இனவரைவியல் ஆய்வுகளின் மூலம் மக்களின் வாழ்வியலை மேற்கொள்ளும் போது துள்ளியமாக கணிக்க முடிகின்றது. இந்த இன ஆய்வின் மூலம் பெறப்படும் தரவுகள் அனைத்தும் அதன் கூறுகளுடன் தொடர்புப் படுத்தப்படுகிறது.உதாரணமாக இனவரைவியல் கூறுகளில் ஒன்றாக விளங்கக்கூடிய சடங்கு என்ற கூறிணை ஆராயும் போது,அதன் மூலம் திருமணச் சடங்கு பற்றிய ஆய்வு நமக்கு கிடைக்கிறது இதன் வழி இனவரைவியலாளர்கள் வகுத்துள்ள இன்றைய திருமண முறைகளயும் அவர்கள் ஆய்வுக்கு பயண்படுத்துவதற்காக வகுத்துள்ள இனவரைவு கூறுகளின் தன்மை சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ள திறனையும் நம்மால் அறியமுடிகிறது. சங்ககாலம் தொடங்கி இக்கால கட்டம் வரையில் திருமணச் சடங்கு என்பது ஒன்றாகவே பார்க்கப்பட்டு வருகிறது,தொல்காப்பிய ஆசிரியர் வரையறை செய்த எண்வகை மணங்களும் அதன் வழி இனவரைவியலாளர்கள் வரைறை செய்த எண்வகை மணங்களும் ஒப்புமைப்படுத்தி பார்க்கும் போது சங்க இலக்கியத்தில் நான்கு வகையான முறைகள் ஒன்றிவருவதை நம்மால் அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்
2. முனைவர் சி.மகேஸ்வரன் இனக்குழுவரைவியல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு
3. முனைவர் ஞா.ஸ்டீபன் இலக்கிய இனவரைவியல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு
4. முனைவர் ஞா.ஸ்டீபன் இலக்கிய இனவரைவியல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு
5. முனவர் ஞா.ஸ்டீபன் இலக்கிய இனவரைவியல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு
6. முனவர் ஞா.ஸ்டீபன் இலக்கிய இனவரைவியல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு
7. தொல்காப்பியம் பொருளதிகாரம் பேரா.எஸ் திருஞானசம்பந்தம் உரை கதிர் பதிப்பகம்
8. முனைவர் சிலம்பு நா.செல்வரசு சங்க இலக்கிய மறுவாசிப்பு(2012) காவ்யா பதிப்பகம்
9. தொல்காப்பியம் பொருளதிகாரம் பேரா.எஸ் திருஞானசம்பந்தம் உரை கதிர் பதிப்பகம்
10. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்
11. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்
12. கலித்தொகை மூலமும் உரையும்(2011)முனைவர் இராசமாணிக்கனார் பூம்புகார் பதிப்பகம்
13. கலித்தொகை மூலமும் உரையும்(2011)முனைவர் இராசமாணிக்கனார் பூம்புகார் பதிப்பகம்
14. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்
15. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்
16. அகநானூறு மூலமும் உரையும் (2019) ந.மு.வேங்கடசாமி நாட்டார் கௌரா பதிக்கம்
17. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்
18. அகநாணூறு மூலமும் உரையும் (2019) ந.மு.வேங்கடசாமி நாட்டார் கௌரா பதிக்கம்

19. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்
20. குறுந்தொகை மூலமும் உரையும் (2016) இராகவவையங்கார் சாராதா பதிப்பகம்
21. ஐங்குறுநூறு(2019) ஔவை துரைசாமிப்பிள்ளை கௌரா பதிப்பகம்
22. இராகவயங்கார் — தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி
23. அகநானூறு மூலமும் உரையும் (2019) ந.மு.வேங்கடசாமி நாட்டார் கௌரா பதிக்கம்
24. ஐங்குறுநூறு(2019) ஔவை துரைசாமிப்பிள்ளை கௌரா பதிப்பகம்
25. பக்தவச்சல பாரதி (2016) பண்பாட்டு மானிடவியல்,சிதம்பரம்,மெய்யப்பன் பதிப்பகம்

**ஆய்வுக்கு துணை நின்ற நூல்கள் ;**

1. பக்தவச்சல பாரதி — பண்பாட்டு மானிடவியல், நெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
2. முனைவர் சி. மகேஸ்வரன் — இனக்குழுவரைவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை
3. முனைவர் ஞா.ஸ்டீபன் — இலக்கிய இனவரைவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை
4. பேராசிரியர் எஸ் திருஞானசம்பந்தம் (உரையாசிரியர்) — தொல்காப்பியம்(பொருள்), கதிர் பதிப்பகம், திருவையாறு
5. முனைவர் இராசமாசிக்கனார் (உரையாசிரியர்) — கலித்தொகை மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம்
6. ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்) — அகநானூறு மூலமும் உரையும், கௌரா பதிப்பகம்
7. மு. இராகவ ஐயங்கார் — குறுந்தொகை மூலமும் உரையும், சாராதா பதிப்பகம்
8. நா.மு வேங்கடசாமி நாட்டார் — ஐங்குறுநூறு மூலமும் உரையும், கௌரா பதிப்பகம்
9. மு.இராகவ ஐயங்கார் — தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, தமிழ்ச் சங்க முத்திராசாலை - மதுரை

*REFERENCE BOOKS*

1. *Bakthavachala Barathi* — *panpattu maanidaviyal*, *Meyiyappan publications*, *Chithambaram*

2. *Dr. S. Magesvaran* — *Inakuzhu Variviyal*, *New Century Book House*, *Chennai*

3. *Dr. N. Stephan* — *Ilakiya Enavariviyal*, *New Century Book House*, *Cheenai*

4. *Prof. S. Thirugnanasam ( Lecturer )* — *Tholkappiyam ( porul )*, *Kathir Publications*, *Thiruvaiyaru*

5. *Dr. Rasamaanikanar (Lecturer )* — *Kalith thogai*, *Mulamum Uraium*, *Boombukar publications*, *Cheenai*

6. *N.M Vengadaswamy Nadar ( Lecturer )* — *Agananooru*, *Mulamum Uraium*, *Gowra Publications*

7. *M.Ragava Iyangar ( Lecturer )* — *Kurunthogai*, *Mulamum uraium*, *Saradha Publications*

8. *N. M Vengadasway Nadar ( Lecturer )* — *Aingooru nooru*, *mulamum uraium*, *Gowra publications*

9. *M. Ragava Iyangar* — *Tholkaapiya porulathigara aaraichi*, *Tamizhsangam muthirasalai madurai*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com